மணலியில் ரூ. 599.86 கோடி மதிப்பில் 400/230 கி.வோ
வளிமக்காப்பு துணை மின் நிலையம் மற்றும்
தமிழகம் முழுவதும் ரூ. 1745 கோடியில் 30 துணை மின் நிலையங்கள் துவக்கம்

உடன்குடியில் மிகு உய்ய அனல் மின் நிலையம் நிலை - I
ரூ. 10,453 கோடியில் பணி துவக்கம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஈரோடு மாவட்டம் பூனாச்சியில்
அமைக்கப்பட்டுள்ள 110/22 கி.வோ. துணை மின் நிலையம் மற்றும்
9 மாவட்டங்களில் 10 துணை மின் நிலையங்களை காணொலி காட்சி மூலம்
06.08.2018 அன்று தலைமைச் செயலகத்தில் துவக்கி வைத்தார்.

## பாரத ரத்னா புரட்சித் தலைவர்

# டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு நிறைவு விழா

மற்றும்

## தமிழ்நாடு 50ஆம் ஆண்டு பொன்விழா

# மின் மிகை மாநிலமாக திகழும் தமிழகம்

## தமிழ்நாடு மின்சார வாரியம்

## சாதனைகள்

## 2016 - 2018

# தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சாதனைகள் (2016 – 2018)

- தமிழ்நாட்டின் மொத்த மின் நிறுவு திறன் 31.08.2018 அன்று உள்ளபடி 29748 மெகாவாட் ஆகும்.
- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மின் திட்டங்கள், மத்திய அரசின் மின் உற்பத்தி திட்டங்களின் பங்கு, கூட்டு முயற்சி மின் திட்டங்கள் மின் கொள்முதல் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் 2,123 மெகாவாட் கூடுதல் மின் நிறுவு திறன் தமிழக மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.
- 10.08.2016 அன்று 1000 மெகாவாட் திறன் கொண்ட கூடங்குளம் அணுமின் நிலையத்தின் முதல் அலகு (தமிழ்நாட்டிற்கு கிடைக்கும் பங்கு 563 மெகாவாட்) துவக்கம்.
- கூடங்குளம் அணுமின் நிலையத்தின் இரண்டாம் அலகு (தமிழ்நாட்டிற்கு கிடைக்கும் பங்கு 563 மெகாவாட்) 31.03.2017 அன்று செயல்படுத்தப்பட்டது.
- 2x660 மெகாவாட் உடன்குடி மிக உய்ய அனல் மின் நிலைய திட்டம் நிலை–1–க்கு 29.01.2018 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.
- குந்தா நீரேற்று மின் திட்டப்பணிகள் (4x125 மெகாவாட்) 18.05.2018 அன்று துவக்கம்.
- 27.04.2018 அன்று தமிழ்நாடு உச்சகட்ட மின் தேவையான 15,440 மெகாவாட் அளவையும் மற்றும் உச்ச மின் பயனீட்டளவான 355.733 மில்லியன் யூனிட்டையும் பூர்த்தி செய்துள்ளது.
- 653.06 மெகாவாட் அளவிற்கு புதிய காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன. மின் உற்பத்தி திறன் 8,269.215 மெகாவாட் ஆகும். காற்றாலை மின் உற்பத்தி இதுவரை இல்லாத அதிக பட்ச அளவிலான 107.317 மில்லியன் யூனிட் மின்சாரம் 19.07.2018 அன்று பெறப்பட்டுள்ளது.
- 1,135 மெகாவாட் அளவிற்கு சூரிய மின் சக்தி நிறுவு திறன் தமிழ்நாடு மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டது. 31.08.2018 அன்றுள்ளபடி, 2,278 மெகாவாட் சூரிய மின் சக்தி நிறுவு திறன் உள்ளது.
- இதுவரை இல்லாத அதிகபட்ச அளவாக சூரிய சக்தி மின்சாரம் 12.808 மில்லியன் யூனிட் 08.09.2018 அன்று பெறப்பட்டுள்ளது.
- அனல் மின் நிலையங்களில் உற்பத்தி செய்யப்படவிருக்கும் மின்சாரத்தை வெளியேற்றுவதற்காகவும் மின் பயனீட்டாளர்களுக்கு சீரான மின்சாரத்தை வழங்குவதற்காகவும் 124 துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. 3,928 சுற்று கி.மீ. மிக உயர் மின் அழுத்த பாதைகள் (EHT) இயக்கி வைக்கப்பட்டுள்ளன.
- மின் பயனீட்டாளர்களுக்கு சீரான மின்சாரத்தை வழங்குவதற்கு கடந்த 6,320 கி.மீ உயரழுத்த மின் பாதைகளும் (HT), 18,179 கி.மீ தாழ்வழுத்த மின் பாதைகளும் (LT), மற்றும் 36,300 மின்மாற்றிகளும் இயக்கத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. இது தவிர 21.32 இலட்சம் புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- மின் நுகர்வோர் புதிய தாழ்வழுத்த மின் இணைப்பிற்கான விண்ணப்பங்களை இணையதளம் மூலம் விண்ணப்பிக்கும் முறை 05.08.2016 அன்று துவக்கம். இத்திட்டத்தின் கீழ், இதுவரையில் 4,013 மின்னிணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- ஒரு நாள் மின் இணைப்பு திட்டம் 12.06.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், இதுவரையில் 4,73,150 மின்னிணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

# தொடரும் சாதனைகள்...

- மின்நுகர்வோரின் உற்ற நண்பனாக செயல்படகூடிய மின்சார நண்பன் (ஊர்ஜா மித்ரா) திட்டம் தமிழகத்தில் 12.06.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் மின் நுகர்வோர்களுக்கு, அவர்கள் பகுதியில் ஏற்பட உள்ள/ஏற்பட்டுள்ள மின் தடை குறித்த தகவல் குறுஞ்செய்தி மூலம் தெரிவிக்கப்படுகிறது.
- விவசாயிகள் நலன்கருதி, தட்கல் விரைவுத் திட்டம் அமல்படுத்தப்பட்டது. 2017–18ல் 30,385 இலவச விவசாய மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2018–19ல் இதுவரையில் 8,136 இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.
- மேலும், தொழிற்துறையை ஊக்குவிக்கும் பொருட்டு, 112 கிலோவாட் வரையிலான மின் தேவை கொண்ட தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கு புதிய மின்னிணைப்பு மற்றும் கூடுதல் மின்பளு அனுமதி 7 நாட்களுக்குள் வழங்கும் திட்டமானது 15.07.2017 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், இது வரையில், 40,600 மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- எளிய முறையில் வணிகம் எனும் இலட்சியத்தின் மூலம் தொழிற்துறையை மேலும் விரிவுபடுத்திட 10 மெகாவோல்ட் ஆம்பியர் (MVA) மின் தேவையும் அதற்கு மேலும் அல்லது ரூபாய் 100 கோடியும் அதற்கு மேலும் முதலீடு செய்யும் தொழிற்சாலை மற்றும் தொழில் முனைவோருக்கு 24x7 மின்சாரம் பெறுவதற்கான புதிய கொள்கை 05.09.2017 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது.
- மின்பயனீட்டாளர்கள் தங்களது மின் கட்டணத்தை சுலபமாக செலுத்த வலையதள வங்கி, பண அட்டை மற்றும் கடன் அட்டை மூலம் செலுத்துதல், வங்கி கைபேசி செயலிகள், தபால் நிலையங்கள், வங்கி கவுண்டர்கள், வங்கி ஏ.டி.எம்கள், அரசு இ–சேவை மையங்கள் ஆகிய வசதிகளுடன் மேலும் சிரமமின்றி எளிதாக மின்கட்டணம் செலுத்த Android மற்றும் IOS தளங்களில் கைபேசி செயலி முறை துவக்கி வைக்கப்பட்டது.
- மின்பயனீட்டாளர்கள் மின் கட்டணம் செலுத்த பாரத் மின் கட்டண சேவை முறை (Bharat Bill Payment System) 2018 பிப்ரவரி மாதம் முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.
- தாழ்வழுத்த மின்பயனீட்டாளர்கள் மின் கட்டணம் செலுத்த ஏதுவாக சென்னையில் விற்பனை நிலையக் கருவிகள் (Swiping Machines) 31.10.2017 அன்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- முதல் 100 யூனிட், மின்சாரம் கட்டணம் ஏதுமில்லாமல் அனைத்து வீடு களுக்கும் வழங்கப்படுகிறது. இதன் மூலம் 211.42 இலட்சம் மின் பயனீட்டாளர்கள் பயனடைகிறார்கள். இதற்காக நடப்பாண்டிற்கு மட்டும் ரூ.3023.62 கோடி ரூபாய் அரசுக்கு கூடுதல் செலவாகிறது.
- கைத்தறி நெசவாளர்களுக்கு தற்போது கட்டணமில்லாமல் வழங்கப்படும் 100 யூனிட்கள் மின்சாரம் 200 யூனிட்டுகளாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் 80,172 கைத்தறி மின் நுகர்வோர்களும் பயனடைகிறார்கள். இதனால் நடப்பாண்டில் ரூ.4.63 கோடி அரசுக்கு கூடுதல் செலவாகிறது.